அவர்கள் அந்தப் பணியினைச் செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அந்த அதிகாரிகள் இனிமேல் இதிலே உரியகவனம் செலுத்த வேண்டும் என்று தாங்கள் அவர்களுக்கு கருத்து அறிவிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன் வேறு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிறகு நீங்கள் அமர்ந்து விட்டால் நல்லது. என்னுடைய தீர்ப்புக்குப் பின்னால் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்வது இல்லை.

திரு. க. சுப்பு : தீர்ப்பின் மேல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையின் மேல் எழுப்பக்கூடாது.

. க சுப்பு ; *.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அவர்கள் பேசியதை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்தப் பிரச்னை மீது எழுப்பக்கூடாது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டி இம்மாதத்தில் இருந்து வரிகொடா இயக்கம் அறிவித்திருப்பதால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை பற்ற விவாதிக்க'' பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கீழக்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். திரு. மு. அம்பிகாபதி, திரு. க.சுப்பு, திரு. துரைமுருகன். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. க. சுப்பு, பேசவேண்டியதை இப்போதே பேசிவிடுங்கள். தீர்ப்பு கொடுத்ததற்குப் பின்னால் மறுபடியும் கேட்காமல் இப்போதே பேசி விடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்பேரில் ஒரு உரிமை மிறல் பிரச்னையைக் கொடுத்திருந்தேன். அது பற்றி எடுத்துக்கொள்ளவும் இல்லை, தாங்கள் சொல்லவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய பார்வையிலிருந்து விடுபட்டிருக்கலாம்.

திரு. க. சுப்பு : நானும் அவரும் ஒன்றாக கையெழுத்துப் போட்டு கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சியிலேஇரண்டு பேர் இருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அவர்களைப் பற்றி வேண்டாம். நான் கொடுத்தது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கூட சேர்த்துக் கொள்ளலாம். என்னுடைய கவனத்திற்கு வராமலேயே போயிருக்கலாம். நான் பார்க்கிறேன் என்று சொல்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் ; தங்களிடத்தில் நானே கொடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்க்கிறேன் என்று சொல்கிறேன். என்னுடைன் பார்வையிலே இருந்து விடுபட்டிருக்கலாம்,

(முற்பகல் 10·00)

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளபடாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உறுப்பினருடைய தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் கூட இது விஷயமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அது திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. இவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். என்னுடைய பெயர் நீக்கப்பட்டு இருக்கிறதே அதற்கு என்ன காரணம் ?